கருத்துகளைப் பகிர்வதற்காகப் பொதுமக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது தேவையற்றது!

# கழக Genz செயற்பாட்டாளர் அன்பானந்தனுக்கு ஜாமீன்!

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

தேவக்கோட்தடை, ஜூலை 11-

முதலமைச்சர் குறித்து இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விமர்சனம் செய்ததாகக் கூறி கழக Genz செயல் பாட்டாளர் அன்பானந்தம் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். மேலும் அவரை காவலில் வைக்கக் கோரி காவல் துறை தாக்கல் செய்த மனுவை நிராகரித்த தேன்கனிக்கோட்டை நீதி மன்றம், அவருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

தேன்கனிக்கோட்டை மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற மாண்பமை நீதிபதி ஜே. தினேஷ் குமரன் அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணையின் போது, காவல் துறை பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்திருந்தாலும், முதற்கட்டமாக தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 67 மட்டுமே இந்த வழக்கிற்குப் பொருந்துகிறது. இரு பிரிவினரிடையே பகைமையை வளர்த்தல் அல்லது பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்தல் போன்ற இதர குற்றச்சாட்டுகளுக் கான ஆதாரங்கள் இதில் இல்லை என்று நீதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் வெறும் கருத்துக் களைப் பகிர்வதற்காகப் பொதுமக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது தேவையற்றது என்றும், சட்டம் ஒழுங்கு பாதிப்பு அல்லது வன்முறை தூண்டப்படாத பட்சத்தில் நீதிமன்றக் காவல் தேவையில்லை என்றும் குறிப்பிட்டு விசாரணையின் பெரும்பகுதி முடிந்துவிட்டதாலும், மேலும் காவல் விசாரணை தேவையில்லை என்பதாலும் அன்பானந்தத்திற்கு நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.



ஈரோடு வடக்கு மாவட்டம் அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அந்தியூர் ஒன்றிய கழக செயளாளருமான ஏ.ஜி.வெங்கடாச்சலம் தாயார் திருமதி ஏ.ஜி.குப்பாயம்மாள் மறைவையொட்டி முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயளாளருமான சு.முத்துசாமி அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்திவிட்டு அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தி.மு.க. ஆட்சி: 2025—26ஆம் கல்வியாண்டில்

# பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கியக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணி!

## ஒன்றிய கல்வி அமைச்சகம் அறிக்கை!

சென்னை, ஜூலை 11-

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது 2025—26ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கியக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என ஒன்றிய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஒன்றிய கல்வி அமைச்சகம் வெளியிட்ட 2025—26ஆம் கல்வியாண்டுக்கான கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பின் அறிக்கையின் அடிப்படையில், கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை பல்வேறு முக்கிய குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்தது தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பின் (UDISE+ 2025-26) அறிக்கையில், பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கிய குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை, இடை நிற்றல் குறைவு, ஆசிரியர் எண்ணிக்கை, கல்வி உள்கட்டமைப்பின் பயனுள்ள பயன்பாடு மற்றும் பத்தாம் வகுப்பிற்கு பிந்தைய கல்வித் தொடர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு தேசிய அளவில் சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

UDISE+ 2025-26 அறிக்கையின்படி தமிழ்நாட்டில் 57,566 பள்ளிகள், 1,24,02,872 மாணவர்கள் மற்றும் 5,69,909 ஆசிரியர்கள் உள்ளனர். மாநிலத்தின் மாணவர் ஆசிரியர் விகிதம் 22:1ஆக உள்ளது. இது, தேசிய சராசரியான 24:1ஐ விடச் சிறப்பாக உள்ளது. மேலும், ஒரு பள்ளிக்கு சராசரியாக 215 மாணவர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் இருப்பது கல்வி உள்கட்டமைப்பு திறமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது. மாணவர் இடை நிற்றல் விகிதத்தில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது.

தொடக்கநிலை மற்றும் நடு நிலைப்பள்ளிகள் இடை நிற்றல் 0.0 சதவீதமாக பதிவாகியுள்ளது. இடைநிலைக் கல்வியில் இடை நிற்றல் விகிதம் 6.2 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேசிய சராசரியான 9.5 சதவீதத்தை விடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும். மொத்த சேர்க்கை விகிதத்திலும் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. தொடக்கநிலையில் 92.2, நடு நிலைப்பள்ளிகள் 95.2, இடைநிலையில் 97.4, மேல்நிலையில் 85.1 என பதிவாகியுள்ளது.

குறிப்பாக இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் தேசிய சராசரியை விட மிகவும் உயர்ந்த சேர்க்கை விகிதத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. பத்தாம் வகுப்பிற்கு பிந்தைய கல்வித் தொடர்ச்சியிலும் மாநிலம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேல்நிலைக் கல்வியில் மாநிலத்தின் மொத்த சேர்க்கை விகிதம் 85.1 ஆக உள்ளது. இதனுடன், 2025-26 கல்வியாண்டில் 83,600 மாணவர்கள் பாலிடெக்னிக் கல்வியிலும், 60,355 மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் சேர்ந்துள்ளனர்.

மொத்தமாக 1,43,955 மாணவர்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி பாதையை தேர்ந்தெடுத்துள்ளனர். இது மாணவர்களின் திறன், விருப்பம் மற்றும் வேலை வாய்ப்பு நோக்கங்களை கருத்தில் கொண்டு பல்வேறு கல்விப் பாதைகளை தமிழ்நாடு வெற்றிகரமாக உருவாக்கியிருப்பதை வெளிப்படுத்துகிறது. கல்வி உள்கட்டமைப்பின் பயன்பாட்டிலும் தமிழ்நாடு சிறப்பாகத் திகழ்கிறது. தேசிய அளவில் ஒரு பள்ளிக்கு சராசரியாக 169 மாணவர்கள் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஒரு பள்ளிக்கு 215 மாணவர்கள் உள்ளனர்.

இது பள்ளிக் கல்வி வளங்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதையும், கல்வி நிறுவனங்கள் கல்வியியல் ரீதியாக வலுவாக செயல்படுவதையும் காட்டுகிறது. மேலும், தமிழ்நாட்டில் பள்ளிகளின் கட்டமைப்பும் சமநிலையுடன் அமைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் 59.05 சதவீதம் தொடக்கப் பள்ளிகள், 15.87 சதவீதம் நடு நிலைப்பள்ளிகள், 9.42 சதவீதம் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 15.66 சதவீதம் மேல்நிலைப் பள்ளிகள் ஆக உள்ளன. இந்த சமநிலையான அமைப்பு மாணவர்கள் இடையூறு இன்றி அடுத்தடுத்த கல்வி நிலைகளுக்கு முன்னேற உதவுகிறது.

மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு தரமான கல்வி, டிஜிட்டல் கல்வி உள்கட்டமைப்பு, உள்ளடக்கிய கல்வி, தொழில்நுட்பத் திறன் மேம்பாடு மற்றும் எதிர்கால தேவைகளுக்கேற்ற கற்றல் சூழலை உருவாக்கும் பணிகளில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னெடுத்து வரும் முயற்சிகளுக்கு இந்த அறிக்கை வலுவான அங்கீகாரமாக அமைந்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பெற்றோரை முதுமைக் காலத்தில் பராமரிக்காவிட்டால்

# பிள்ளைகளுக்கு எழுதி வைத்த சொத்தை திரும்பப் பெறலாம்!

## மும்பை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

மும்பை, ஜூலை 11-

முதுமை காலத்தில் தங்களைப் பராமரிப்பார்கள் என்ற நம்பிக்கையில் பிள்ளைகளுக்கு சொத்துகளை எழுதி வைக்கும் பெற்றோருக்கு ஆதரவாக, மும்பை ஐகோர்ட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க அதிரடி தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. பெற்றோரைச் சரியாகக் கவனிக்காத பட்சத்தில், பிள்ளைகளுக்கு எழுதி கொடுத்த சொத்துகளை அவர்கள் தாராளமாகத் திரும்ப பெறலாம் என்று உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக கூறியுள்ளது.

அதன் விவரம் வருமாறு:...

**மகனுக்கு நிபந்தனையுடன் தானபத்திரம்!**

மும்பை லோயர் பரேல் பகுதியைச் சேர்ந்த 68 வயது நகைக்கடை உரிமையாளர் ஒருவர், கடந்த 2005ம் ஆண்டு வாங்கிய அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் தனது மனைவி மற்றும் மகனுடன் வசித்து வந்தார். முதுமை காலத்தில் தன்னையும், தனது 60 வயது மனைவியையும் அன்போடு கவனித்து, அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்ற முக்கிய நிபந்தனையுடன், கடந்த 2023ஆம் ஆண்டு மே 8ஆம் தேதியன்று அந்த வீட்டைத் தனது மகனுக்கு தானபத்திரம் மூலம் அவர் மாற்றிக்கொடுத்தார்.

**சிறப்பு தீர்ப்பாயத்தை அணுகிய தந்தை...**

ஆனால், சொத்து கைக்கு வந்த சில காலத்திலேயே குடும்ப உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதன் உச்ச கட்டமாக, கடந்த 2025ம் ஆண்டு அந்த முதியவரும், அவரது மனைவியும் சொந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். மகன் தங்களைக் கைவிட்டதால் அதிர்ச்சியடைந்த பெற்றோர், 'பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007'ன் கீழ் செயல்படும் சிறப்புத் தீர்ப்பாயத்தை அணுகி முறையிட்டனர்.

**உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த மகன்...**

இந்த வழக்கை முழுமையாக விசாரித்த தீர்ப்பாயம், மகனும், அவரது குடும்பத்தினரும் அடுத்த 60 நாட்களுக்குள் வீட்டை முழுமையாகக் காலி செய்து, பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அதிரடி உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை எதிர்த்து, அவரது மகன் மும்பை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். அவரது சார்பில் ஆஜரான வக்கீல் "எனது மனுதாரரின் தந்தை பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்றவர். அவருக்குச் சொந்த தொழிலும், பிற சொத்துகளும் தாராளமாக உள்ளன. எனவே இந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும்" என்று வாதாடினார். இந்த வாதத்தை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஏற்க மறுத்தனர்....

**நிபந்தனைகள் மீறப்பட்டால் சொத்தை திரும்பப் பெறலாம்...**

மேலும் அவர்கள் தங்கள் தீர்ப்பில் "முதியோர் நலச் சட்டத்தின் 23வது பிரிவின் படி, பெற்றோரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் சொத்து மாற்றம் செய்யப்பட்டு, அந்த நிபந்தனையைச் சொத்தைப் பெற்றுக் கொண்டவர் நிறைவேற்றத் தவறினால், அந்தச் சொத்து மாற்றத்தையே செல்லாததாக அறிவிக்க சட்டத்தில் இடமுண்டு. மேலும், இந்தச் சட்டப்பிரிவின் பயன்பாடு என்பது மூத்த குடிமக்களின் பொருளாதார நிலையைப் பொறுத்தது அல்ல. பெற்றோர் ஏழையா?, பணக்காரரா? என்பது முக்கியமல்ல. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு நிபந்தனைகள் மீறப்பட்டால், சொத்து மாற்றத்தை தாராளமாக செல்லாததாக அறிவிக்கலாம். எனவே பிள்ளைகள் பெற்றோர்களை கவனிக்காவிட்டால் எழுதி கொடுத்த சொத்தை திரும்ப பெறலாம்"

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

### நாகர்கோவில் மாநகர மேற்குப் பகுதி

# 21 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜூலை 11-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி, 21 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 09.07.2026 - வியாழக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் ராணித் தோட்டம், நேசமணி நகர் பகுதியில் உள்ள வட்ட செயலாளர் ஆதித்தன் அவர்களின் இல்ல வளாகத்தில் வைத்து 21 வது வட்ட கழக செயலாளர் ரா.ஆதித்தன் தலைமையில், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சைமன்ராஜ், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் லதா கலைவாணன், வட்ட பிரதிநிதிகள் தமிழ்செல்வன், கோபாலகிருஷ்ணன், ஜோண்ஸ், கழக நிர்வாகிகள் ராயப்பன், அசோக்குமார், மகளிர் அணி நிர்வாகிகள் சகி ஷீலா, விமலா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்:1 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான கள பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி, 21 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வட்ட கழக செயலாளர் ரா.ஆதித்தன் தலைமையில், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சைமன்ராஜ், லதா கலைவாணன், தமிழ்செல்வன், கோபாலகிருஷ்ணன், ஜோண்ஸ், கழக நிர்வாகிகள் ராயப்பன், அசோக்குமார், மகளிர் அணி நிர்வாகிகள் சகி ஷீலா, விமலா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பாலவாக்கம் பகுதியில் தொடர் மின்வெட்டு;

# முதலமைச்சர் செல்லும் சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டம்!

## அதிகாரிகளுடன் வாக்குவாதம்; பரபரப்பு!

சென்னை, ஜூலை 11–

பாலவாக்கம் பகுதியில் தொடர் மின்வெட்டை கண்டித்து முதலமைச்சர் செல்லும் சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மின்வாரிய அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. தமிழ்நாடு முழுவதும் கடந்த பல நாட்களாக தொடர்ந்து பல்வேறு இடங்களில் மின்தடை ஏற்பட்டு ஆங்காங்கே பொதுமக்கள் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிடுதல், சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று நள்ளிரவு கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பாலவாக்கம் பகுதியில் இரவு 9 மணிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பல மணி நேரமாக தொடர் மின்வெட்டு ஏற்பட்டதால் அப்பகுதி மக்கள் இரவில் தூங்க முடியாமல் தவித்தனர். மின்வாரிய அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் 100க்கும் மேற்பட்டோர் தங்களது குழந்தைகளுடன் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, பொதுமக்களின் கேள்விக்கு மின்வாரிய அதிகாரிகள் முறையான பதில் அளிக்காததால், கோபமடைந்த மக்கள், கிழக்கு கடற்கரை சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கிழக்கு கடற்கரை சாலையில் நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதுகுறித்து தகவலறிந்ததும் நீலாங்கரை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள், முதலமைச்சர் தினந்தோறும் இவ்வழியாகத்தான் செல்கிறார்.

அவருக்கு மின்தடை பற்றி தெரியாதா, அவர் வீட்டில் ஜெனரேட்டர் வைத்துகொண்டு தூங்குவார், எங்கள் வீட்டில் ஜெனரேட்டர் இல்லையே, நாங்கள் ஏழைகள், என்ன செய்வது என சரமாரி கேள்வி எழுப்பினர். இதையடுத்து தவெக நிர்வாகிகளை பொதுமக்கள் சூழ்ந்துகொண்டு கேள்வி எழுப்பியபோது, எந்தவித பதிலும் அளிக்காமல் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். இதனையடுத்து போலீசார் தொடர்ந்து பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், இப்பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது. தற்போது நள்ளிரவு 12 மணி ஆகிறது.

குழந்தைகளை வைத்துகொண்டு தூங்க முடியாமல் தெருவில் நின்று கொண்டிருக்கிறோம். இதை எல்லாம் பார்த்தால் எங்களை அரசு அலட்சியப் படுத்துவதுபோல் இருக்கிறது. நாங்கள் எல்லாம் கஷ்டப்படுகிற குடும்பத்தை சேர்ந்தவர்கள். பள்ளிக்கு செல்லும் குழந்தைகள், கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், முதியவர்கள், நோயாளிகள் வீட்டில் தூங்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறோம். மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் சுவிட்ச் ஆப் செய்து வைக்கின்றனர். எனவே, அமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்து எங்கள் பகுதிக்கு சீரான மின்சாரம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீர்காழி வை. ஞானசேகரன்

### ஜூலை 11 (2014)



அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கலைஞர் செம்மொழி நூலகம்', 'தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்' ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**